# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization
Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 39. தொடரூந்துகளைப் பயன்படுத்துதல்

**விளக்கம்:** *கோவிட் -19ற்கு எதிர்வினையாற்றும் தற்போதைய சூழ்நிலையில், தொடரூந்துகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையானது அப்பயணிகளுக்கு இடையில் போதிய உடல் இடைவெளியினைப் பேணுவதற்கு ஏற்றவகையில் மட்டுப்படுத்தப்படுவதுடன் பிற பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்.*

**பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்**

**தொடரூந்து நிலைய அதிபர்கள் / தொடரூந்து சாரதிகள்/ பயணச்சீட்டுப் பரிசோதகர்களுக்கு**

- ஒரு தொடரூந்தில் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச பயணிகளின் எண்ணிக்கை அதன் மொத்த இருக்கைகளது எண்ணிக்கையின் பாதி அளவாக இருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக ஒரு பேரூந்தானது 50 இருக்கைகளைக் கொண்டிருந்தால் அப் பேரூந்தில் குறித்த நேரத்தில் பயணம் செய்பவர்களது அதிகபட்ச எண்ணிக்கை 25 மட்டுமே. எந்த ஒரு பயணியும் பேரூந்தில் நின்றவாறு பயணம் செய்ய முடியாது. நிலைமைகளது முன்னேற்றத்தின் அடிப்படையில் பேரூந்துகளில் பயணிக்க அனுமதிக்கப்படும் அதிகபட்ச பயணிகளது எண்ணிக்கை குறித்துச் சுகாதார அமைச்சினால் அறியத்தரப்படும்.
- பயணிகளுக்கு இடையே ஒரு மீற்றர் உடல் இடைவெளி பேணப்படுவதனை உறுதி செய்யுங்கள்.
- தொடரூந்தில் அனைத்துச் சாளரங்களும் திறந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்துப் புகையிரத நிலையங்களிலும் கை கழுவும் வசதி இருப்பதை உறுதி செய்யுங்கள்.
- தொடரூந்து சாரதிகள் மற்றும் பயணச்சீட்டுப் பரிசோதர்கள் தனிப்பட்ட கை தூய்மிப்பான் குடுவைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- இயலுமானால் ஒவ்வொரு பெட்டியிலும் சுவரில் பொருத்தப்படும் கைதூய்மிப்பான் குடுவைகளைப் பொருத்தவும்.
- அனைத்து புகையிரதங்களும் நாள் முடிவில் சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யுங்கள்.
- ஒவ்வொரு பயணத்திற்கும் பணம் செலுத்துவதற்குப் பதிலாக பருவகாலச் சீட்டுகளின் பயன்பாட்டை முடிந்தவரை ஊக்குவிக்கவும்.

**பயணிகளுக்கு**

- ஒருவருக்கொருவர் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணியபடி தொடரூந்து நிலையத்தில் வரிசையில் காத்திருங்கள்.
- முகக்கவசத்தைச் சரியாக அணிய வேண்டும்.
- வசதிகள் காணப்பட்டால், தொடரூந்தில் நுழைவதற்கு முன்பு உங்கள் கைகளைச் சவர்க்காரம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை உபயோகித்தோ அல்லது கை தூய்மிப்பான்களைப் பயன்படுத்தியோ தொற்றுநீக்கம் செய்யவும்.
- தொடரூந்துக்குள் ஆள்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி பேணப்படுவதனை செய்யுங்கள்.
- எடுத்துச் செல்லும் பைகள் மற்றும் பொருட்களைக் குறைவாகப் பேணவும்.
- இயலுமானவரை தொடரூந்துக்குள் இருக்கும் போது அலைபேசியினைத் தொடாமல் இருக்க முயற்சிக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் மேற்பரப்புகளை அவசியம் இன்றித் தொட வேண்டாம். உதாரணம். கைதாங்கிகள்இ இருக்கைகள்இ கதவுகள்இ சட்டகங்கள் போன்றவை.
- தொடரூந்தில் பயணம் செய்த பிறகு உங்கள் கைகளை சவர்க்காரமும் நீரும் பயன்படுத்தி ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு நன்கு கழுவிக் கொள்ளவும்.
- உங்களுக்கு மெலிதான சுவாச நோய் அறிகுறிகள் இருந்தாலும் தொடரூந்துகளைப் பயன்படுத்துவதனைத்

தவிர்க்கவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- பொதுசனத் தொடர்பு ஊடகங்கள்.
- முக்கிய தொடரூந்து நிலையங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் *(pubic address systems)* அறிவித்தல்களை மேற்கொள்ளல்.
- அனைத்துத் தொடரூந்துப் பெட்டிகளிலும் பொருத்தமான அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்துதல்.



**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020